C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 18

JUNE 2026

ஆகாரம் : 06



**கர்த்தர்**

தமது ஜனத்திற்குப்

பெலன்கொடுப்பார்

**கர்த்தர்**

தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை

**ஆசீர்வதிப்பார்.**

சங்கீதம் 29:11

# UPCOMING EVENTS

**All Sun June '26** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**06 June '26** — Saturday
7:30 pm
**CBS EXAM IN CHURCH**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**20 June '26** — Saturday
6:30pm - 09:30pm
**CBS PROGRAM CHURCH SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**06 20 June '26** — Saturday
7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**06 June '26** — Saturday
10:30am
**FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish
Alain

**13 June '26** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
**BY MEN'S FELLOWSHIP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**27 June '26** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING**
**CHURCH SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**27 June '26** — Saturday
9:30 pm
**BIBLE QUIZ**
**JEREMIAH 1-52**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Wed June '26** — Wednesday
7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish
Alain

**30 June '26** — Sunday
11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish
Alain




அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். இருண்ட கண்டம் என அழைக்கப்படும் ஆப்பிரிக்க நாட்டிற்கு நற்செய்தி ஒளியேற்ற திரு.டேவிட் லிவிங்ஸ்டன் மிஷ்னரி அவர்களுக்கு கிடைத்த ஆண்டவரின் அழைப்பால் புறப்பட்டுச் சென்றார். கடினமான மனிதர்கள் ஒருபுறம், காட்டு மிருகங்கள் மறுபுறம் என ஒவ்வொரு நாளும் மரண விளிம்பில் தான் டேவிட் லிவிங்ஸ்டன் அவர்கள் திருப்பணியைச் செய்தார். ஒருமுறை காண்டாமிருகம் வேகமாய் அவரை முட்டித் தள்ள வந்தது. நிச்சயம் தொலைந்தோம் என்று அவர் நினைத்தார், காரணம் காண்டாமிருகத்தின் பெலனே அதன் தலையில் இருப்பதாகச் சொல்வர். அது தன் முழு பலத்தோடு மோதினால் அது பச்சை மரமானாலும் தூள் தூளாக போய்விடும். காண்டாமிருகத்தின் வல்லமை டேவிட் லிவிங்ஸ்டனுக்குத் தெரிந்ததால் நடுங்கிப் போனார். ஆனால் அருகில் வந்த காண்டாமிருகம் தனக்கு முன்னே அணை போட்டது போல அப்படியே நின்று விட்டது, கர்த்தர் நின்று அவரை அதிசயமாய் பாதுகாத்தார். மற்றொரு முறை கருப்பின காட்டு மனிதன் பத்தடி தூரத்திலிருந்து ஒரு ஈட்டியை எடுத்து அவரை நோக்கி எறிந்தான். அது அவர் கழுத்தின் ஓரமாய் பாய்ந்துச் சென்று,அவருக்குப் பின்பு இருந்த மரத்தில் குத்தி அப்படியே நின்று விட்டது. இம்முறையும் கர்த்தர் தம்முடைய அற்புதமான வல்லமையால் மிஷனரி திரு.டேவிட் லிவிங்ஸ்டனைக் காப்பாற்றினார். அவரது திரு இரத்தத்தால் கழுவப்பட்ட ஒவ்வொரு நபரையும் கர்த்தரே பாதுகாக்கின்றார்.

### பெலன் கொடுக்கின்றவர்:

சங்கீதக்காரரான தாவீது தமது சங்கீதம் 29:11—ல் தம் அனுபவத்தை குறிப்பிட்டுப் பாடுகின்றார். கர்த்தரை நம்பி இருக்கிற மக்களை அவர் தமது பெலன் கொடுத்து பாதுகாக்கின்றவர் என்பதை நினைத்து,கர்த்தரை துதித்துப் போற்றிப் பாடுகின்றார்.

பிரியமானவர்களே, கர்த்தரை தமது தெய்வமாகக் கொண்டு அவரையேப் பின்பற்றி வாழுகின்ற ஒவ்வொருவருக்கும் அவரே பெலன் கொடுக்கிறவர், அடைக்கலமானவர் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பாதம் பற்றி வாழ நம்மை அழைக்கின்றார்.

### நிறைவைத் தருகின்றவர்:

அமைதியற்ற, போர்ச்சூழல் மிகுந்த காலகட்டத்தில் தாவீது அரசரின் வாழ்வில் கர்த்தர் தாமே சமாதானத்தை அருளி, அவரை ஆசீர்வதித்து நிறைவை பெற்றுக் கொள்ளும் படியாகச் செய்தார். அதாவது ஆடுகளுக்கு பின்னாகச் சென்ற தாவீதை தெரிவு செய்து, அரியணையில் அரசராக உயர்த்தினார், நிறைவை தாவீது பெற்றார். அந்த அனுபவம் மிக்க பாடல் வரி தான் சங்கீதம் 29:11 ஆகும்.

அன்பிற்கினியவர்களே, ஆண்டவரே நமக்கு சமாதானத்தைத் தருகின்றவர், ஆசீர்வதிக்கின்றவர், நிறைவாழ்வைத் தந்து வழிநடத்துகின்றவர். சர்வ வல்லமை பொருந்தின ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ளுவோம். அவர் நம்மைப் பாதுகாத்து, சமாதானத்தை அருளி, ஆசீர்வதித்து, நிறைவாழ்வைத் தந்து வழிநடத்துவார், ஆமென்.




இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan



# தாய் அன்பு கொண்டவர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாயினும் மேலான அன்பு கொண்டு தெய்வம் என்பதை நாம் திருமறை வழியாக படிக்கிறோம், தியானிக்கிறோம், அனுபவிக்கிறோம். பேரன்பு கொண்ட ஆண்டவருக்கு தொடர்ந்து நன்றி செலுத்துவோம், அவரது திருப்பாதங்களை பற்றிக்கொண்டு வாழ்வோம்.

## சுமந்தவர்

கர்த்தராகிய ஆண்டவர் இஸ்ரவேலரிடம் கூறியது, கழுகு தன் குஞ்சுகளை தனது செட்டைகளிலே சுமந்து கொண்டு போகிறது போல நான் உங்களைச் சுமந்து செல்லுகிறேன் என்பதே (உபாகமம் 32:11,12). இதனை தாவீது தனது அனுபவத்திலே ஆண்டவரின் அன்பை அனுபவித்து சங்கீதம் 36:7—ல் அவர் தமது செட்டைகளின் நிழலிலே மனுபுத்திரர் அனைவரும் வந்தடைவர் என்றுப் பாடுகிறார். இந்த அன்பின் வெளிப்பாடு அன்றைக்கு இஸ்ரவேலரிடத்தில் வெளிப்பட்டது, இன்றைக்கு அந்தப் பேரன்பு தொடர்ந்து நம்மிடையே வெளிப்படுகின்றது.

## வழிநடத்தினவர்

கர்த்தர் தாமே அன்றைக்கு பகலிலே மேகஸ்தம்பமாக, இரவிலே அக்கினி ஸ்தம்பமாக முன்னும் பின்னும் இஸ்ரவேலரை வழி நடத்தினார் (யாத்திராகமம் 13:21), காரணம் ஆண்டவரின் பேரன்புக்கு இணை ஏதுமில்லை. அவர் தாம் தெரிந்து கொண்ட மக்களை அனைத்துச் சூழல்களிலும், இக்கட்டான வேலைகளிலும் அவரே வழிநடத்துகின்றவர் என்பதற்கு இஸ்ரவேலரின் விடுதலை வரலாறேச் சான்று. அந்த அன்பு கொண்ட ஆண்டவர் நம்மிடையே தொடர்ந்து நம் ஒவ்வொருவரின் தாயாக முன் நின்று வழிநடத்திச் செல்கின்றார் இதை நாம் அனுபவித்து வருகின்றோம், ஆண்டவருக்கு உள்ளார்ந்த மனத்துடன் நன்றி உள்ளவர்களாக வாழ்வோம்.

## சேர்த்துக் கொண்டவர்

எகிப்தியரின் கையினின்று இஸ்ரவேலரை விடுவித்து, சுமந்துக்காத்து, வழிநடத்தி (யாத்திராகமம் 19:4) விசாலமான பாலும் தேனும் ஓடுகிற கானானில் கொண்டு போய் சேர்த்தவர் கர்த்தர்.தம்மண்டை வருகின்ற ஒவ்வொருவரையும் தாய் அன்பு கொண்ட ஆண்டவர் தாமே அனைத்து நெருக்கங்கள், இக்கட்டுகள், பாடுகள் இவற்றிநின்று விடுவித்து, வழிநடத்தி ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்கின்றவர்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறுவது, ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள்.அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார் (மத்தேயு 6:26), நீங்கள் கவலைப்படாமல் கர்த்தரை தேடுங்கள் என்பதுவே.

### புத்தியில்லாதவர்கள் (மத் 25:3)

பிரியமானவர்களே, நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மிகுந்த அன்பு கொண்டவர். அந்த அன்பின் உச்சமே தாய் அன்பின் நிறைவு ஆகும். அந்த அன்பு கொண்ட ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் சுமக்கின்றவர், வழி நடத்துகின்றவர், தமது நிழலிலே, அடைக்களத்திலே சேர்த்துக் கொள்ளுகின்றவர். அவரது திருப்பாதங்களையே இறுகப் பற்றிக்கொள்வோம், ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.




இறைப்பணியில்,

ஆயரம்மா



*Mrs . P . Velanganni*

## மன்னா மே-26 மீள் பார்வை




ஆண்டவர் இயேசு-வுக்கே மகிமை. மே மாத மன்னாவைக் குறித்த ஒரு பார்வை. பக்-3, ஆயர் மடலில் நாம் சரியாக உழைத்திட வேண்டும், ஆண்டவரின் திருப்பா-தங்களை அடைக்கலமாக கொண்டிருக்க வேண்டும் என்றும், பக்-4ல், அர்ப்பணிப்புள்ளக் பெண்கள் போல் புத்தி உள்ளவர்களாக நாம் வாழ வேண்டும் என்றும், பக்-6, செயலர் மடலில் எளியோருக்கு முக்காலத்தும் அடைக்கலமானவர் கர்த்தரே என்றும், பக்-8ல், உண்மையான மனந்திரும்புதல் நமக்கு தேவையானது என்றும், பக்-9ல், அளவிட முடியாத அன்பு கொண்ட கிறிஸ்துவையே பற்றிக் கொள்வோம் என்றும், பக்-10ல், நம்மை பலப்படுத்துகிற கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொள்வோம் என்றும், தொடர்ந்து சிறுபிள்ளைகளின் கைவண்ணங்களும், யோபு நூலின் வினாக்களுக்கான விடைகள் எழுதியுள்ளோர், சிறு பிள்ளைகளுக்கான புதிர்கள், 19 ஆம் ஆண்டு திருச்சபை நாள் புகைப்படங்கள் என அனைத்தும், ARTICLE எழுதின அனைவருக்கும் பாராட்டுக்கள். கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே...

நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சபைக் குழுவின் சார்பாக உங்கள் அனைவருக்கும் அன்பார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களை கர்த்தரின் கிருபையாலும் வழிநடத்துதலாலும் கடந்து வந்திருக்கிறோம். நம் குடும்பங்களை பாதுகாத்து வழிநடத்தி, நம் கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதித்த தேவனுக்கு நன்றி நிறைந்த இதயத்தோடு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நம் திருச்சபையை சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கிற போதகருக்கும், அர்ப்பணிப்புடனும் திறம்படவும் செயல்பட்ட முன்னாள் சபைக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய திருச்சபையில் நடைபெற்று வருகின்ற அனைத்து கிளைச் சங்கங்களின் பொறுப்பாளர்கள் அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். அவர்கள் தொடர்ந்து ஆண்டவரின் நாம மகிமைக்காக தங்கள் ஊழியத்தையும் பொறுப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றி, அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்கிட வாழ்த்துகிறேன்.

தொடர்ந்து வரும் நாட்களில் சபையின் அனைத்து ஊழியங்களிலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். தேவனுடைய மாறாத அன்பும் கிருபையும் உங்கள் அனைவருடனும் எப்போதும் இருப்பதாக.




**இறைப் பணியில்**

**MR. BELFER JOHN SIGAMONI**

**திருச்சபைச் செயலர்**

# The Church: More Than a Place

Today, many believers ask, “Why should we go to church when we can pray, worship, read the Bible, and listen to sermons from home?” While technology gives us many opportunities to grow spiritually, the Bible teaches that the church is far more than a building or a weekly program. The church is the family of God united in Christ.

The early believers “continued steadfastly in the apostles’ doctrine and fellowship, in the breaking of bread, and in prayers” (Acts 2:42). God desires His people to gather together in unity, love, and fellowship. Church is not only about hearing God’s Word; it is about living as one body in Christ.

Jesus said, “By this everyone will know that you are My disciples, if you love one another” (John 13:35). True worship is not simply singing songs together, and true prayer is not only presenting our personal needs before God. God looks at the condition of our hearts—whether we genuinely love, forgive, and care for one another.

Think for a moment about two different prayers God may hear at the same time. In one place, a Christian mother in a war zone cries before God saying, “Lord, I struggle to forgive those who killed my child. Help me to reconcile. Help me to love my enemies.” In another place, we believers who faithfully attend church may pray, “Lord, I cannot forgive that brother or sister who spoke against me or hurt my feelings.”

How often we struggle to forgive small offenses while expecting God to hear our worship and prayers. If we cannot reconcile with fellow believers over temporary misunderstandings, how can we obey Christ’s command to “love your enemies” (Matthew 5:44)? The Bible reminds us before communion to examine ourselves (1 Corinthians 11:28). Are we carrying bitterness, pride, or unforgiveness in our hearts? God has protected, provided for, and cared for us in countless ways. In return, He desires that His children reflect His love through unity and forgiveness.

Hebrews 10:24–25 says, “Let us consider one another in order to stir up love and good works, not forsaking the assembling of ourselves together.” The beauty of the church is not in traditions or programs alone, but in believers coming together with one heart and one spirit. When the church gathers in genuine love, prayer, forgiveness, and oneness, God is glorified. That fellowship becomes a powerful testimony of Christ’s presence among His people.

Article by

**MEN’S FELLOWSHIP**



# புத்தியுள்ள ஸ்திரீ

**"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்" (நீதி 14:1)**

வீடுகள் கட்டப்படுவதையும் இடிக்கப்படுவதையும் கவனித்திருக்கிறீர்களா? கட்டுவதற்கு அதிக சிரமம் எடுக்கப்படும். கல்லின் மேல் கல்லாக அடுக்கி, நேர்த்தியாக கட்ட அதிக காலம் எடுக்கும். ஆனால், இடிக்கும்போதோ ஒரு நொடியிலேயே அதை தரைமட்டமாக்கி விடலாம். இடிப்பதை நேர்த்தியாக செய்ய வேண்டும் என்று எந்த கட்டாயமும் இல்லை. அதிக காலம் எடுத்து செய்ய வேண்டும் என்று எந்த நிர்பந்தமும் இல்லை. உடைக்க நினைத்த மறுகணமே உடைத்துவிடலாம். அது மிக இலகுவான ஒரு வேலை. இதிலிருந்து என்ன புரிகிறது? கட்டுவது எவ்வளவு கடினம்! ஆனால், இடிப்பதோ மிகவும் சுலபம். நாம் கட்டுகிறவர்களா? அல்லது இடிக்கிறவர்களா?

கட்டுகின்ற இந்தக் கடினமான காரியத்தையே ஒரு புத்தியுள்ள ஸ்திரீ செய்கிறாள் என்று வேதம் உணர்த்துகிறது. அவளது குடும்பம் என்ற வீட்டை அது எவ்வளவு கடினமாக இருந்தாலும் அவள் கட்டுவதற்கே பிரயாசப்படுவாளே தவிர, அதை இடித்துப் போட அவள் ஒரு நாளும் நினைக்கமாட்டாள். ஆனால் புத்தியில்லாத ஸ்திரீயோ, கூச்சமோ, தாமதமோ காட்டாமல் இந்த மடைமைத்தனமான காரியத்தை செய்ய எடுத்தனிப்பாள்.

**"கர்த்தர் வீட்டைக் கட்டாரகில் அதை கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" – சங்கீதம் 127:1.**

அப்படியானால் வீட்டைக் கட்டுகிற அந்தப் புத்தியுள்ள ஸ்திரீ கர்த்தருடன் சேர்ந்துதான் தனது குடும்ப வீட்டைக் கட்டுகிறாள் என்பது புரிகிறது. ஏனெனில், கர்த்தர் கட்டாவிட்டால் அவளது பிரயாசம் விருதாவாகப் போய்விடும். கர்த்தருடன் இணைந்து கட்டும் வீடு கர்த்தரின் ஆசீர்வாதத்தால் நிறைந்து காணப்படும். வீடுகளில் பொதுவாக தொங்கும் ஒரு வாசகம், "சேர்ந்து ஜெபிக்கும் குடும்பமே சேர்ந்திருக்கும்". அது உண்மைதான். தேவனை தமது இல்லத்தின் தலைவராகக் கொண்டு அவரை ஆராதித்து அவருக்கு உண்மைத்துவமாக இருக்கும் குடும்பம் என்றும் தேவனுக்கு பிரியமான குடும்பமாக இருக்கும். அது தேவனால் கட்டப்பட்ட குடும்பமாயும் இருக்கும். முன்னர் பார்த்த மாதிரி, கட்டுவது இலகுவான காரியம் அல்ல. இலகுவில் முடியக்கூடிய காரியமும் அல்ல. பல சவால்கள் சோதனைகளை சந்திக்க நேரிடும். ஆனால், கர்த்தர் கூடவே இருக்கும் போது நாம் எதற்கு பயப்பட வேண்டும்!

நமது குடும்பங்களின் நிலை எப்படி இருக்கிறது? புத்தியுள்ள ஸ்திரீகளாக நாம் நமது இல்லங்களை கட்ட முயலுகிறோமா? அல்லது நமது கைகளாலயே நமது குடும்பங்களுக்கு அழிவினை கொடுக்க முயலுகிறோமா?

**"வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்திரம். புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு" – நீதி 19:4**

Article by

**SIS. SABATINI JERIN**

Women's Fellowship




துன்பம் வந்து துயரம் தந்தால் தோளாய் வந்து நிற்பவர் நீர் கண்ணீர் வழியும் கண்கள் எல்லாம் கருணையால் துடைப்பவர் நீர் இருள் சூழ்ந்த என் வாழ்க்கையில் ஒளியாக வந்து ஜொலிப்பவர்…உடைந்த மனத்தின் ஓசையைக் கேட்டு உறுதியாய் என்னைத் தாங்குபவர் மனிதர் விட்டு விலகினாலும் மாறாத அன்பாய் இருப்பவர் சுமைகள் நிறைந்த பாதையிலும் சுகமான வழி காட்டுபவர் துன்பத்தில் துணை நிற்பவர் தூய இயேசு ஆண்டவரே நம்பிக்கை தீபம் ஏற்றிவைத்து நாளும் என்னை நடத்துவாரே.

"கர்த்தர் நொறுங்குண்ட இருதயத்தாருக்கு சமீபமாய் இருக்கிறார்" சங்கீதம் 34:18.

## முன்னுரை

மனித வாழ்க்கையில் துன்பங்களும் சோதனைகளும் தவிர்க்க முடியாதவை. அந்த நேரங்களில் நமக்கு ஆறுதல் அளித்து,துணையாக நிற்பவர் கர்த்தரே. பரிசுத்த வேதாகமம் முழுவதும் கர்த்தர் துன்பத்தில் இருப்பவர்களை கைவிடாமல் காத்துக் கொள்கிறார் என்றுக் கூறுகின்றது. ஆகையால் துன்பத்தில் உண்மையான துணையாக நிற்கின்றவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து.அவர் நம்மைக் கைவிடார். திருமறையில் “கர்த்தர் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று வாக்குத்தத்தம் அளிக்கிறார்” இந்த வசனம் எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்பதை உணர்த்துகிறது.

## ஆறுதல் தரும் ஆண்டவர்

மனிதர்கள் சில நேரங்களில் நம்மை புரிந்துக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் கர்த்தரோ நம் கண்ணீரையும், வேதனையையும் அறிந்திருக்கிறார். ”கர்த்தர் நொறுங்குண்ட இருதயத்தாருக்கு சமீபமாய் இருக்கிறார்” சங்கீதம் 34:18. இதனால் மனம் உடைந்தவர்களுக்கு ஆண்டவர் ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கிறார்.

## ஜெபத்தின் வல்லமை

துன்ப நேரங்களில் ஜெபம் நமக்கு பலம் தருகிறது.நாம் கர்த்தரை நோக்கி ஜெபிக்கும் போது அவர் நமக்கு சமாதானத்தை அளிக்கிறார். “உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள், அவர் உங்களை விசாரிக்கிறவராய் இருக்கிறார்” 1பேதுரு 5:7. இந்த வசனம் நம் பாரங்களை கர்த்தரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை கற்பிக்கிறது.

## இயேசு–உண்மையான நண்பர்

இயேசு கிறிஸ்து துன்பப்படுவோருக்கு உதவி செய்தார், நோயாளிகளை சுகமாக்கினார், துக்கப்படுவோருக்கு ஆறுதலளித்தார். அவர் அன்பும், இரக்கமும் நிறைந்தவர். “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்து இருப்பவர்களே,நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” மத்தேயு 11:28.

## முடிவுரை

துன்பம் மனித வாழ்க்கையில் ஒரு பகுதி, அத்துன்பத்தில் நம்மை தாங்கி நடத்துபவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. அவரை நம்பி ஜெபிக்கும் பொழுது ஆறுதல், பெலன், சமாதானம் இவை கிடைக்கும். எனவே துன்பத்தில் உண்மையாக துணை நிற்கின்றவர் இயேசு கிறிஸ்துவே என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்வோம், ஆண்டவர் இயேசுவைப் பற்றிக் கொண்டு வாழ்வோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

Article by
**MRS. BLESSY JEBA**
Youth Fellowship

தங்கள் கவனத்திற்கு...

அன்பிற்கினியவர்களே, வாழ்த்துக்கள்.

நமது திருச்சபையின் ஆண்டு பொதுக்குழு கூடுகை கடந்த 09.05.26–அன்று நடைபெற்றது,அதன் தொடர்ச்சியாக 23.05.26–அன்றைக்கு நடைபெற்று முடிந்தது. இக்கூடுகைகளில் நமது திருச்சபையின் புதிய செயற்குழு உறுப்பினர்களாக

திருமதி. பேசில் ஷாலு, திரு. பெல்பர் ஜான், திரு. அசோக்குமார், திருமதி. ஜெயின் ராஜவேல், திரு. ஜோஸ் செல்வகுமார், திரு. பிரேம் ஜெனிபர், திரு. சுஜிக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுள்
திருமதி. ஜெயின் ராஜவேல் –உதவித்தலைவர், திரு. பெல்பர் ஜான்–செயலர், திருமதி. பேசில் ஷாலு–பொருளர், திரு. அசோக் குமார்–வார்டன் என்று திருச்சபையின் பொறுப்பாளர்களாக திருப்பனியை செய்ய உள்ளனர் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து திரு. சுஜிக்குமார் – C.B.S ஒருங்கிணைப்பாளராக, திரு. பிரேம் ஜெனிபர் பாடகர் குழு பொறுப்பாளராக, திரு. அசோக்குமார் – Outreach Ministry பொறுப்பாளராக, திரு. ஜோஸ்செல்வகுமார் – ஆண்கள் ஐக்கிய சங்க பொறுப்பாளராக, திருமதி.ஜெயின் ராஜவேல் – பெண்கள் ஐக்கிய சங்க பொறுப்பாளராக, திருமதி. பேசில் ஷாலு – வாலிபர் ஐக்கிய சங்க பொறுப்பாளராக திருப்பணிகளைச் செய்ய உள்ளனர் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்,

தொடர்ந்து திருச்சபையாக இவர்களுக்காக ஜெபித்துக் கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சென்ற செயற்குழு உறுப்பினர்களாக திருப்பணிகளைச் செய்த திரு.பிராங்கிளின் கிறிஸ்டோபர்–உதவி தலைவர், திரு.சந்தோஷ்குமார்–செயலர், திருமதி. பேசில்ஷாலு–பொருளர், திரு.வெர்சிலின் பென்னி–வார்டன் மற்றும் திரு.பிரேம்ஜெனிபர், திரு. சுஜிக்குமார், திரு. ஏனோக் பிரபாகர் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் திருப்பணி செய்த அனைவருக்கும் திருச்சபை சார்பாக உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கடவுள் தாமே அனைவரையும் ஆசீர்வதிப்பாராக, நன்றி.

இறைப்பணியில்,

ஆயர்

# PSALMS 1-15
# சங்கீதம் 1-15

1.காற்றைப் போல பறப்பவன் யார்?

2.கர்த்தரை எப்படி சேவிக்க வேண்டும்?

3.என்னைச் சுற்றிலும் படை எடுக்கிறவர்கள் எத்தனைப் பேர்?

4. எப்போது உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டிருங்கள்?

5. பயபக்தியுடன் பணிந்து கொள்வது எங்கே?

6. யார் வெட்கி மிகவும் கலங்கிப் போவார்கள்?

7. இரட்சிக்கிற தேவனிடத்தில் என்ன இருக்கிறது?

8. கர்த்தருடைய விரல்களின் கிரியை எது?

9. தாங்கள் வெட்டின குழியில் விழுந்தவர்கள் யார்?

10. தேவனுக்கு தன்னை ஒப்புவிக்கிறவன் யார்?

11. கர்த்தருடைய முகம் யாரை நோக்கி இருக்கிறது?

12. கர்த்தருடைய சொற்கள் எதற்கு ஒப்பானது?

13. எதினால் என் இருதயம் களிகூரும்?

14. இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு எங்கே இருந்து வரும்?

15. யார் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறுவதில்லை?

## மே-2026 மாத வினாவிற்கான விடைகள்

1. யோபு 28:28
2. யோபு 29:12
3. யோபு 30:23
4. யோபு 31:33
5. யோபு 32:18
6. யோபு 33:26
7. யோபு 34:15
8. யோபு 35:12
9. யோபு 36:33
10. யோபு 37:11
11. யோபு 38:14
12. யோபு 39:30
13. யோபு 40:20
14. யோபு 41:27
15. யோபு 42:16.

மே-2026 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்

திருமதி. பிப்ளின் நெல்சன்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. ரோஸ்மேரி


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.







# CBS - JUNIOR A

## TEACHER: MRS. RENA JOSE







JERVIN





BERNICIA






INIYAL




JANIA



Name:

Date:

Kids Coloring



Bible Word Search



# God is Love

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | S | G | M | E | R | C | Y | J | K |
| E | A | L | D | W | I | S | D | O | M |
| F | L | P | O | J | F | H | I | T | V |
| O | V | A | O | V | H | E | J | E | G |
| R | A | T | V | Q | E | A | W | A | R |
| G | T | I | R | D | A | L | E | C | A |
| I | I | E | F | A | I | T | H | H | C |
| V | O | N | Y | M | P | A | L | E | E |
| E | N | C | T | R | U | S | T | R | E |
| Q | Q | E | K | K | G | U | I | D | E |


Name : ..............................................................................

WORD SEARCH

Name : ............................................................

# NOAH'S ARK
## AND THE GREAT FLOOD

Help guide the ark to land.






Name : ..............................................................................



# Bible Crossword




Read the clues and fill in the corresponding squares on the puzzle.















## DOWN

3. The one who committed the first sin
4. Isaac's son
6. Naomi's loyal daughter-in-law
7. Garden where sin began

## ACROSS

1. Old Testament character who listens to God
2. He was sold by his brothers
5. Holy spot for offerings in Old Testament

# JUNE - 2026

| | |
|---|---|
| 03-JUNE | Mr. D. Jeyakumar |
| 04-JUNE | Ms. Nancy Esther Rajathi |
| 05-JUNE | Mrs. Shalini |
| 05-JUNE | Mrs. K.S. Monsy |
| 06-JUNE | Mr. Jaffrin Jerald |
| 06-JUNE | Mr. Joel Ranjith Kumar |
| 07-JUNE | Mr. Anish |
| 08-JUNE | Mr. Ujin Raj |
| 09-JUNE | Ms. Ansilin Suga |
| 10-JUNE | Mr. P. Chandrasekar |
| 10-JUNE | Mr. Nishan Josap |
| 10-JUNE | Mr. Simson Kumaradhas |
| 12-JUNE | Mr. Thiyagu Murugaraj |
| 17-JUNE | Mrs. Anitha Jose |
| 18-JUNE | Mrs. Malini |
| 18-JUNE | Mr. N. Jeba |
| 18-JUNE | Mrs. Karunya |
| 19-JUNE | Mrs. Kezia Jeyakodi |
| 22-JUNE | Mr. Melbin Paul |
| 23-JUNE | Mr. Belfer John Sigamony |
| 23-JUNE | Mrs. Jennifer |
| 23-JUNE | Master. Neo Chris |

*"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."*

# JUNE - 2026

| | |
|---|---|
| 26-JUNE | Mr. Ashok Prasad |
| 27-JUNE | Baby. Kaitlyn Sara Rajesh |
| 27-JUNE | Ms. Shiny Rebeca |
| 27-JUNE | Mr. Prince Pitchiah |
| 28-JUNE | Mrs. Dr. Ashley Giftus |
| 30-JUNE | Mr. M. Nesamony |

# JUNE Wedding ANNIVERSARY

| | |
|---|---|
| 01-JUNE | Mr. Jeremiah Kingston & Mrs. Olivia Sherin |
| 04-JUNE | Mr. Jerin & Mrs. Sebatini Samuel Jerin |
| 06-JUNE | Mr. Ashok Prasad & Mrs. Eben A. Prasad |
| 06-JUNE | Mr. Dhana Sekar & Mrs. Grace Packia Sugirtha |
| 15-JUNE | Mr. S. Deva Prakash & Mrs. Sheeba Deva Prakash |
| 16-JUNE | Mr. K.S. Suji kumar & Mrs. D. Berlin Suniba |
| 21-JUNE | Mr. Balaji Ramaiyan & Mrs. Roselin Tamil Selvi |
| 29-JUNE | Mr. Celin Jose & Mrs. Anitha Jose |

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14




EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY